# வலயக் கல்வி அலுவலகம் - கிளிநொச்சி

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2020

| தரம் :07 | சைவசமயம் | நேரம் : 2.00 மணி |
|---|---|---|
| | சுட்டெண் ...................................................................... | |

## பகுதி - I

❖ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. திருச்சிராப்பள்ளியில் வீற்றிருக்கும் இறைவன் பெயர்.
1) சுப்பிரமணியன் 2) தாயுமான சுவாமி 3) கந்தசுவாமி

02. சோழவள நாட்டை ஆட்சி செய்த மன்னன்.
1) இராஜஇராஜசோழன் 2) இராஜேந்திரசோழன் 3) அநபாயச்சோழன்

03. புதுமனை அமைக்கும் விதி முறைகளைக் கூறும் நூல்.
1) மணையடி சாஸ்திரம் 2) அர்த்த சாஸ்திரம் 3) தர்ம சாஸ்திரம்

04. சைவவித்தியா விருத்திச் சங்கம் தோற்றம் பெற்ற ஆண்டு.
1) 1924 2) 1925 3) 1923

(4x2 ½ = 10 புள்ளிகள்)

**02. பொருத்தமான விடையை வைத்து இடைவெளிநிரப்புக.**

01. தைப்பொங்கலை ................................... எனவும் அழைப்பர்.

02. தேவார முதலிகளால் ........................................ பாடப்பட்டது.

03. காரைக்காலம்மையாரின் கணவர் பெயர் ..................................... ஆகும்.

04. 8 ஆம் திருமுறையாக ................................................... அமைகின்றது.

05. தேர் ஓடாது தடைப்பட்டபோது ........................................................ பாடப்பட்டது.

**( அடங்கன் திருமுறை / திருப்பல்லாண்டு / மகரசங்கிராந்தி / பரமதத்தன் / திருக்கோவை)**

(5x2 = 10 புள்ளிகள்)



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

**03. தொடர்புபடுத்துக.**

| | அ | ஆ |
|---|---|---|
| 01. | தூலலிங்கம் | சீர்காழி |
| 02. | யாழ்முரி | ஈசானமூலை |
| 03. | திருத்தோணிபுரம் | திருஞானசம்பந்தர் |
| 04. | பெரியபுராணம் | இராஜகோபுரம் |
| 05. | அத்திபாரமிடல் | சேக்கிழார் |

(5x2 = 10 புள்ளிகள்)

**04. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

01. நட்சத்திரங்களில் பூசம் எட்டாவதாகும். ( )
02. தேவார முதலிகளுள் மாணிக்க வாசரும் ஒருவராவார். ( )
03. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஔவையார் வாக்கு. ( )
04. ஆண், பெண் இருபாலாரும் செய்யும் நமஸ்காரம் திரியாங்கம் ஆகும். ( )
05. சிவனடியார்களை போற்றும் முகமாக திருத்தொண்டர் தொகை பாடப்பட்டது. ( )

(5x2 = 10 புள்ளிகள்)

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

01) அ) திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே புலித்தோலை ..........................................................

மின்னார் .......................... மேல் மிளிர் .............................. அணிந்தவனே

மன்னே ................................................ மழ பாடியுள் ...................................

..................................... உன்னையல்லால் ........................................ நினைக்கேனே.

திருச்சிற்றம்பலம்

ஆ. பின்வரும் தேவாரப் பாடல்களில் இரண்டினைத் தெரிவு செய்து வரிக்கிரமமாக எழுதுக. பாடியவர், தலம், பண் என்பவற்றைக் குறிப்பிடுக.

1. நிரைகளலரவம்................
2. அன்ன நடையார்.
3. குழலொழி யாழொலி .........


(10 புள்ளிகள்)



Education கல்வி அதியாபன

kalvi.lk

02) பின்வரும் படங்களைப் பார்த்து மூன்று வாக்கியங்கள் எழுதுக.

1) 

1) ..........................................................................................

2) ..........................................................................................

3) ..........................................................................................

2) 

1) ..........................................................................................

2) ..........................................................................................

3) ..........................................................................................

3) 

1) ..........................................................................................

2) ..........................................................................................

3) ..........................................................................................

(10 புள்ளிகள்)

03) 1. மாணவரிடையே ஒழுக்கம் வளர்க்கப்படும் இடங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
2. பாடசாலையில் சைவசமயத்தினை வளர்க்கும் முகமாக செய்யப்படும் நான்கினைக் குறிப்பிடுக.
3. தேவாரம் பாடும் முன்பும், பின்பும் திருச்சிற்றம்பலம் கூறப்படுவதற்கான காரணம் யாது?

(3+3+4 = 10 புள்ளிகள்)

04) 1. விரதம் தொடர்பாக ஆறுமுக நாவலரது கருத்து யாது?
2. தைப்பூச விரதத்தின் சிறப்புக்களைக் குறிப்பிடுக.
3. பண்டிகைகளையும், விரதங்களையும் அனுஷ்டிப்பதனால் மாணவர்களிடம் வளர்க்கப்படும் பண்புகள் 04 தருக.

(3+3+4 = 10 புள்ளிகள்)

05) 1. சமயகுரவர் நால்வரையும் குறிப்பிடுக.
2. சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்த இடம், தாய் தந்தை பெயர், இயற்பெயர் என்பவற்றைக் குறிப்பிடுக.
3. மாணிக்கவாசகர் நிகழ்த்திய அற்புதங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(3+3+4 = 10 புள்ளிகள்)

06) 1. புதுமனைப்புகுதல் என்றால் என்ன?
2. அத்திபாரம் இடுகின்றபோது வைக்கப்படும் பொருட்கள் நான்கினைக் குறிப்பிடுக.
3. கிரகப் பிரவேச நாளன்று கோயிலில் இருந்து எடுத்துச் செல்லப்படும் பொருட்கள் நான்கினைத் தருக.

(3+3+4 = 10 புள்ளிகள்)

07) 1. “ஆலயம்” என்பதன் பொருள் யாது?
2. ஆலயத்திற்குக் கொண்டு செல்லப்படும் பொருட்களினைக் குறிப்பிடுக.
3. நீர் ஆலயத்திற்குச் செல்லும் சைவாசார முறையினைக் கூறுக.

(3+3+4 = 10 புள்ளிகள்)

08) பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.
1. காரைக்கால் அம்மையார்
2. சேர். பொன் இராமநாதன்
3. வாழ்வியல் நற்பண்புகள்
4. பண்டிகைகள்

(2x5= 10 புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

GRADE
# 6,7,8

STUDY WITH US..!
# SCIENCE
ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
|---|---|
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

075 287 1457

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page